**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.39/2019**

**CNR.No.TNCB19000**

| Deposition | : | PW.2 |
|---|---|---|
| Name | : | விஸ்வநாதன் |
| Father’s / Husband’s Name | : | பசுவராஜ் |
| Village / முகவரி | : | கீழ்கோத்தகிரி |
| Taluk / தாலுக்கா | : | நீலகிரி மாவட்டம் |
| Age / வயது | : | 66 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 23th February 2026

**முதல் விசாரணை**

நான் கீழ்கோத்தகிரி தூனேரியில் வசித்து வந்தேன் . தற்போது மேட்டுப்பாளையம் டீச்சர்ஸ் காலனியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். வாதி பிரதிவாதியை தெரியும். பிரதிவாதி பக்கத்து ஊரை சார்ந்தவர். பிரதிவாதி மோகன்குமார் எனக்கு தூரத்து உறவினர் . அவர் தனது மகளுக்கு திருமணம் ஏற்பாடு செய்திருப்பதால் பணம் வேண்டுமென என்னிடம் கேட்டார் . எனது வீட்டிற்கு அருகில் வசித்து வரும் வாதி கங்காதரனிடம் ரூ . 4 லட்சம் பிரதிவாதிக்கு வாங்கி கொடுத்தேன். பிரதிவாதி வட்டிக்கு கேட்டதால் நான் வாங்கி கொடுத்தேன். ரூ. 1.50 வட்டிக்கு கேட்டதன்பேரில் வாங்கி கொடுத்தேன். மூன்று வருடங்களாக வட்டியும் கொடுக்கவில்லை. அசலும் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா. சா. ஆ 1 கடன் ஒப்பந்த பத்திரத்தை நான்தான் எழுதினேன். அந்த பத்திரத்தில் நானும் சாட்சியாக கையெழுத்து செய்தேன். பிரதிவாதி மோகன்குமார் பத்திரத்தை வாங்கி கொடுத்தார் அதில் நான் எழுதினேன் . பிரதிவாதியும் கையெழுத்து செய்தார்

குறுக்கு விசாரணை -

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.